[25th July 1962

### *Medical Colleges*

* 627 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the details of the schemes for the expansion of the existing Medical Colleges and for the opening of new medical colleges during the current financial year; and

(*b*) the expenditure involved?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) Staff and equipment have been sanctioned for the Thanjavur Medical College, Thanjavur and the Madurai Medical College, Madurai, under the scheme "Expansion of the existing Medical Colleges." There is no scheme at present to open new Medical Colleges but there is a proposal under the consideration of the Government to shift the Kilpauk Medical College, Madras, from Madras City and locate it in a suitable place in the mofussil.

(*b*) Expansion of Medical Colleges.—Rs. 4,04,553.

Shifting of the Kilpauk Medical College.—Rs. 1,00,000

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஸார், கீழ்ப்பாக்கத்தில் இருக்கும் கல்லூரியை எந்த மாவட்டத்திற்கு மாற்றுவதாக ஆலோசனையில் இருக்கிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** கீழ்ப்பாக்கம் கல்லூரியை ஸிடியிலிருந்து மாற்றுவது என்பது யோசனையில் இருக்கிறது. எந்த மாவட்டத்திற்கு மாற்றப்படும் என்று இன்றைக்குக் குறிப்பாகக் கூற முடியாது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** மூன்றாவது திட்ட காலத்தில் ஒரு புதிய கல்லூரி திறக்கவேண்டும் என்று குறிக்கோள் இருக்கிறதே, அது எப்போது அமுலுக்கு வரும் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** மூன்றாவது திட்ட காலத்தில் புதுக் கல்லூரி வருவது கஷ்டம். நான்காவது திட்டத்தில் தான் வரக் கூடும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் குறிப்பிட விரும்புவது கீழ்ப்பாக்கம் கல்லூரி தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது.

### தொழிற் கல்லூரிகள் (அமைத்தல்)

* 628 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வைத்தியக் கல்லூரிகளிலும், இன்சினியரிங் கல்லூரிகளிலும், 1961-62-ம் ஆண்டு எந்த அடிப்படையில் பல்வேறு மாவட்டங்களுக்கும் எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

(இ) மொத்தம் எத்தனை விண்ணப்பங்கள் வந்தன ?

(உ) எத்தனை பெண்கள் விண்ணப்பித்திருந்தனர் ?

25th July 1962]

(எ) எத்தனை பேர்களுக்கு இடமளிக்கப்பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) (இ), (உ), (எ). A statement[a] is placed on the table of the House.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இதிலே 1961-62-வது ஆண்டிலே நீலகிரிக்கு 7 ஸீட் கொடுக்கப்பட்டு இருக்கிறது. 1962-63-ல் இது 6 ஸீட்டாக குறைந்து விட்டதற்குக் காரணம் என்ன ? ஜனத்தொகை குறைந்துவிட்டதா ? அப்படி ஜனத்தொகை அடிப்படையிலே கொடுக்கப்படுவதாக இருந்தால், 7 ஸீட் என்பது 8-ஆக அல்லவா உயர்ந்திருக்க வேண்டும். ஆகவே, இதற்குக் காரணம் என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸார், இந்த 7 ஸீட் 6-ஆகக் குறைந்ததற்குத் தனிப்பட்ட முறையிலே காரணம் ஒன்றும் சொல்வதற்கு இல்லை. ஏற்கனவே வந்த விண்ணப்பங்களிலே எந்தெந்த எலிஜிபில் கான்டிடேட்டுகளிடம் இருந்து வந்ததோ, அதிலே இருந்து தான் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றார்கள். 9–00 a.m.

**திரு. சா. கணேசன் :** வைத்தியக் கல்லூரிகளில் முதல் ஆண்டு தேர்ச்சிக்கு சேர்க்கப்படுகிறவர்களில் பலர் வெளியேறி விடுவதால், இரண்டாவது ஆண்டிலே கிட்டத்தட்ட 60 இடங்கள் காலியாக இருக்கின்றன என்கிற செய்தி வந்து கொண்டே இருக்கிறது. இது அங்கிகரிக்கப்பட்ட செய்தி என்கிற அளவுக்குக்கூடச் சொல்லலாம். அதற்கு பீ.எஸ்ஸி. தேறியவர்களை இந்த 60 காலியான ஸ்தாபனங்களிலே சேர்த்துப் பூர்த்தி செய்யப்படுமா ? இந்த ஆண்டிலாவது இரண்டாவது வைத்திய வகுப்பில் பீ. எஸ்ஸி. தேறியுள்ளவர்களுக்கு நேரடியாக ஸீட் கொடுத்து, அவர்களை 4 ஆண்டு பயிற்சிக்கு உரியவர்களாக ஆக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸார், இப்போதுள்ள பாலிசி பிரகாரம் பீ. எஸ்ஸி. கான்டிடேட்டாக இருந்தாலும், அவர்களுடைய பி.யூ.சி. மார்க்கை கன்சிடர் பண்ணித்தான் செலக்ட் பண்ணுகிறார்கள். ஆகவே, இப்போது கனம் அங்கத்தினர் அவர்கள் கூறும் இந்த சஜஷனை ஏற்றுக்கொள்ள முடியாது.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஸார், மெடிகல் காலேஜுக்கு அரிஜனங்களுக்கு எத்தனை ஸீட்டுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன ? பிற்பட்ட வகுப்பினருக்கு அதாவது பாக்வேர்ட் கம்யூனிடிக்கு எத்தனை ஸீட்டுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன ? அப்படி ஒதுக்கப்பட்ட சீட்டுகள் அத்தனையும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸார், அரிஜனங்களுக்கு 16 சதவிகிதம் ஸீட்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பிற்பட்ட வகுப்பினர் என்று சொல்லப்படுவோருக்கு 25 சதவிகிதம் ஸீட்டுகள்

[a] Printed as Appendix I on page 357

[25th July 1962

ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே இப்போது செலக்ட் செய்த திலே மட்டும், குறிப்பிட்டுள்ள அளவுக்கு மேல் இன்னும் ஒன்றி ரண்டு ஸீட்டுகள் அதிகமாகவே கொடுத்திருக்கின்றார்கள்.

**திரு. வை. சங்கரன் :** மேஜை மீது வைத்திருக்கக்கூடிய ஸ்டேட் மெண்டைப் பார்க்கும்போது, இதற்கு இத்தனை பேர்கள் விண்ணப்பம் செய்து கொண்டார்கள், இவ்வளவு பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று சொல்லப்பட் டிருக்கின்றதே தவிர, எந்த அடிப்படையின் மூலம் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள் என்கின்ற விவரம் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, பொதுவாக துறமையுள்ளவர்களுக்குத் திறமையை மட்டும் கருதி தனியாக 15, 20 சதவிகிதம் ஸீட் ஒதுக்குவதற்கு சர்க்கார் உத்தே சிக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸார், இப்போது செலக்ஷன் திறமைப் பிரகாரம் தான் நடந்து கொண்டிருக்கிறது. நமக்கு 600 ஸீட்டுகள் இருக்கின்றன. ஆனால் அதற்கு இரண்டா யிரத்திற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இந்த 600 பேர்களையும் செலக்ட் பண்ணும்போது தகுதி யின் அடிப்படையிலேதான் செலக்ட் செய்திருக்கின்றார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அவ்வளவு திறமையான மாணவர் களை இந்த தேர்ந்தெடுக்கும் கமிட்டி தேர்ந்தெடுத்தும், முதல் ஆண்டிலேயே திறமையில்லாமல் தோல்வியுறும் காரணம் என்ன? நண்பர் திரு. சா. கணேசன் அவர்கள் கூறிய யோசனையை ஒப்புக் கொள்ளாவிட்டாலும், முதல் ஆண்டிலே திறமையில்லாது போவ தால், இரண்டாவது ஆண்டிலே இடம் காலியாக விழுகின்றது என்று சொல்லப்படுகின்றதே, அப்படிப்பட்ட காலி ஸ்தானங்களை எப்படி பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதையாவது கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவாரா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸார், கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதுபோல், அந்த ஸ்தானங்கள் காலியாக இருக் கின்றன என்று சொல்வதற்கில்லை. அப்படி தேர்விலே தோல்வி யுற்றவர்களுக்கு செப்டம்பரிலே ஒரு சான்ஸ் கொடுக்கப்படு கின்றது. ஆகவே, The question of vacancy does not arise. அங்கேபோய் பி.எஸ்ஸி. தேர்ந்தவர்களைப் புகுத்துவது என்பது முடியாது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஸார், அமைச்சர் அவர்களுடைய பதிலிலே எலிஜிபில் கான்டிடேட்டுகளுக்குத் தான் ஸீட் கொடுத் திருக்கிறோம் என்று சொன்னார்கள். 'சி'-க்கு மேல், 'பி' 'பி' பிளஸ் 'ஏ', 'ஏ' பிளஸ் என்று மார்க்குகள் வாங்கியிருப்பவர்களி டம் இருந்தெல்லாம் நீலகிரி மாவட்டத்திலிருந்து விண்ணப்பங் கள் வந்திருக்கின்றன. அப்படி எலிஜிபில் கான்டிடேட்டுகளிட மிருந்து விண்ணப்பம் வந்தும், இப்படி ஸீட் குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன? பரிசீலனை செய்ததில் தவறு நிகழ்ந்து இருந் தாலும், இனிமேல் அப்படித் தவறு நடக்காமல் சர்க்கார் கவனித்து கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன் ?

25th July 1962]

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸார், அவ்விதம் தவறு நடந்ததாகவே நான் ஒப்புக்கொள்ள முடியாது. 'சி' பிளசுக்கு மேல் பலர் விண்ணப்பித்து இருந்தாலும், கம்யூனிடி பேசிசிலே எத்தனை பேர்கள் குறிப்பிட்ட அளவுக்கு மார்க்குகள் வாங்கியிருக்கின்றார்களோ, அப்படிப்பட்டவர்களில் யார் யார் நல்ல முறையிலே பதில் அளிக்கின்றார்களோ, அவர்கள் அத்தனை பேர்களையும் செலக்ட் செய்து இருக்கின்றார்கள்.

**திரு கே. மூக்கையா தேவர் :** ஸார், இதிலே மிகவும் பின்தங்கிய வகுப்பார் எத்தனை பேர்கள்? அதாவது மோஸ்ட் பாக்வேர்ட் கம்யூனிடியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள்?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸார், இதிலே எத்தனை மோஸ்ட் பாக்வேர்ட் கம்யூனிடியைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பித்திருக்கின்றார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால், இந்த பரிசீலனை கமிட்டியார் 7, 8 பேர்களுக்கு ஸீட் கொடுத்திருக்கின்றார்கள்.

MR. SPEAKER : All these things relate to 1961–62.

SRI M. KALYANASUNDARAM : But the Hon. Minister has answered our questions.

(Sri T. L. Sasivarna Thevar rose.)

MR. SPEAKER : Does the hon. Member want to put any question with regard to the year 1961–62?

SRI T. L. SASIVARNA THEVAR : I want to put a general question.

MR. SPEAKER : Yes. The hon. Member can put the question.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** ஸார், என்ஜினியரிங் காலேஜுக்கு இன்டர்வியூவிற்குப் போகக் கூடியவர்களையும், மெடிகல் காலேஜுக்கு இன்டர்வியூவிற்கு போகக் கூடியவர்களையும், 'உங்களுக்கு கம்ப ராமாயணம் தெரியுமா? திருக்குறள் தெரியுமா?' என்று கேட்கப்படுவதாகக் கேள்விப்படுகின்றேன். இதற்கும், அந்தப் பாடத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தற்போது தமிழுக்கும், தமிழ் பண்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்கின்ற காரணத்திற்காக அப்படி கேட்கின்றார்கள்.

*Local Fund Dispensaries (taking over)*

* 629 *Q.*—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Health be pleased to state whether the Government have taken over all major Local Fund Dispensaries?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : There was no classification of Local Fund Dispensaries as major or minor. Under section 13 of the Madras Panchayats Act, Local Fund Dispensaries vest in the Panchayat Union Councils while Local Fund Hospitals vest in the Government.